ORIGINAL ARTICLE

# தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் [TAMIḺMOḺIK KAṞṞAL KAṞPITTAL]

# TAMIL LANGUAGE TEACHING AND LEARNING

**திரேஷா பெர்ணாண்டஸ் செல்வமணி / Teresha Fernandaz Selvamany *[1]**

[1] Marsiling Primary School, Singapore. Email: teresha_fernandaz_selvamany@moe.edu.sg

*Corresponding author

DOI: https://doi.org/10.33306/mjssh/178

**Abstract**

This article titled Tamil Language Teaching. Through this article, you can learn about the development of Tamil Language Learning in Teaching, the use of Tamil Language learning, teaching and strategies in Tamil Language. Furthermore, approaches such as thread review and insight used in this article to complete. Continuing, through this article, the importance of Tamil Language education can well understand. In addition, in this article we will able to briefly understand and realize the benefits that an individual achieves through learning the Tamil Language and the changes that take place in his life. You can also learn how teaching Tamil enhances the thinking of every Indian. It is important to note that all of the information for this article linked in the end of this article. Learning is a profession, teaching is a profession too. As Indian, we will do both willingly and let Tamil live; we will enrich.

**Keywords**: Teaching and learning, teaching strategies, thinking skills, observation

**ஆய்வுச் சாரம்**

இக்கட்டுரை தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தல் எனும் தலைப்பில் இடம்பெறுகிறது. இக்கட்டுரையின் வாயிலாக தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலின் வளர்ச்சி, தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலின் பயன்பாடு மற்றும் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலில் உத்திமுறைகள் ஆகியவற்றைப்பற்றி அறிந்துகொள்ளலாம். மேலும், இக்கட்டுரையை முழுமைப்படுத்துவதற்கு நூல் ஆய்வு, உற்று நோக்கல் போன்ற அணுகுமுறைகள் இக்கட்டுரையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. தொடர்ந்து, இக்கட்டுரையின் மூலமாக, தமிழ்மொழிக் கல்வியின் முக்கியத்துவத்தை நன்கு உணர முடியும். அதுமட்டுமின்றி, இக்கட்டுரையில் தமிழ்மொழி கற்றலின் வழி ஒரு தனிமனிதன் அடையும் நன்மை, அவன் வாழ்வில் ஏற்படும் மாற்றங்கள்

போன்றவற்றை நாம் சுருக்கமாக அறிந்துகொள்ளவும் உணரவும் முடியும். தமிழ்மொழி கற்பித்தல் மூலம் ஒவ்வொரு தமிழரின் சிந்தனையை எவ்வாறு மேன்மைப்படுத்துகிறது என்பதையும் அறியலாம். இக்கட்டுரைக்காக சேகரிக்கப்பட்ட தகவல்கள் அனைத்தும், இக்கட்டுரையின் இறுதி பகுதியில் இணைக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடதக்கது. கற்றலும் ஒரு தொழிலே, கற்பித்தலும் ஒரு தொழிலே. தமிழராகிய நாம், இரண்டையும் விருப்பத்துடன் செய்து தமிழை வாழ வைப்போம்; வளப்படுத்துவோம்.

**கருஞ்சொற்கள்:** கற்றல் கற்பித்தல், உத்திமுறைகள், சிந்தனை, உற்றுநோக்கல், முக்கியத்துவம், அணுகுமுறைகள்

This article is licensed under a Creative Commons Attribution-Non Commercial 4.0 International License

Received 27th August 2021, revised 20th September 2021, accepted 2nd October 2021

## முன்னுரை

5000 ஆண்டுகளுக்கும் மேலான பழமையான மொழி என்றாலே, அது நமது தாய்மொழியான தமிழ்மொழியேயாகும். ஆம், தமிழ்மொழி மிகவும் பழமையான பாரம்பரியமான ஒரு மொழியாகும். உலகில் உள்ள எந்த மொழிக்கும் இல்லாத சிறப்பு, தம் தாய்மொழியான தமிழுக்கு உண்டு. நமது பாட்டன், முப்பாட்டன் காலத்தில் குருக்குலக் கல்வியாகக் கற்பிக்கப்பட்டு வந்த கல்வி முறை, பின்னர் திண்ணைப்பள்ளி என மாறி தற்போது முழுமையான தனிக்கட்டிட அமைப்புப் பெற்ற பள்ளிக்கூடமாக தனித்து இயங்குகிறது. காலங்கள் மாற்றம் பெறும்போது, தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் முறையிலும் பல மாற்றங்களும் நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது.

## ஆய்வு நோக்கம்

1. தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் முக்கியத்துவம்.
2. தமிழ்மொழி கற்றல் கற்பித்தலில் தனி மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் நன்மைகள்.
3. தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் மூலம் தனி மனிதனின் சிந்தனை மேம்படுகிறது.

## துணைத் தலைப்புகள்

பல வளர்ச்சிகள் கண்ட நம் தமிழ்மொழியில் இன்று நவீன கல்வி கற்பித்தல் முறை முக்கிய பங்கு வகிக்கிறது. இதன் வழியாக மாணவர்களின் பங்களிப்பும், படைப்பாற்றல் திறன்களும் கற்றல் செயலில் அவர்களின் ஆர்வமும் நவீனமுறையில் கையாளப்படுகிறது எனலாம் (பாபு, 2017)[1]. குறிப்பாக, தற்போது உலகையே ஆட்டிப்படைக்கும் இந்தக் கோவிட்-19

காலத்தின்போது பல துறைகள் செயல்படுவதிலிருந்து தடைப்பட்டாலும், கற்றல் கற்பித்தலில் எந்த தடையுமின்றி நவீன முறையில் கற்பித்தல் நடந்துகொண்டேதான் இருந்தது. ஆம், தமிழ்மொழியின் வளர்ச்சியும் தமிழ்கல்வியின் வளர்ச்சியும் நவீன கல்வி முறைக்கு ஏற்றவாறு பல தளங்களுடன் இன்று இணையத்தில் பரவிய நிலையில் காணப்படுகிறது.

இந்நிலையில் தமிழ்மொழியின் புலக்கம் மக்களிடையே குறைந்து கொண்டே வருகிறது என்றால் அதில் ஆச்சரியம் அடைவதற்கு எதுவுமில்லை. பலர் இன்னமும் தமிழ்மொழி கல்வியின் முக்கியத்துவத்தை அறியாமலே இருக்கிறார்கள். தமிழ்மொழி கற்பித்தலில் பொற்றோரின் பங்கு மிக முக்கியமானதாக அமைகிறது (Angappan, 2016)[2]. 5 மே 2019ல் சிங்கப்பூரில் நடைபெற்ற பாலர் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிலரங்கில் கலந்து கொண்ட கல்வி மூத்த துணை அமைச்சர் சீ ஹொங் டாட் கலந்து கொண்டார். “சிறு வயதிலிருந்தே தாய்மொழி தினசரி நடவடிக்கையிலும் வாழ்க்கை அனுபவம் மூலமாகவும் கற்க தொடங்கும் பிள்ளைகள், பிற்காலத்தில் அம்மொழியில் சிறந்த ஆற்றலைப் பெறுகிறார்கள். மேலும், வீட்டிலும் பள்ளியிலும் மொழி கற்றலுக்கு உகுந்த சூழலை ஏற்படுத்தி தர முடியும்”, என்று கூறினார் (தமிழ் முரசு நாளிதழ், 2019)[3]. தொடர்ந்து, இளைய தலைமுறையினரிடையே தமிழ்மொழி ஆர்வத்தையும் ஈடுபாட்டையும் வளர்ப்பது முக்கியம் என்றும், அவற்றின் மூலமே தமிழ் மரபு, பண்பாடு, பண்புநெறிகளை சிறந்த முறையில் அவர்களுக்கு உணர்த்த முடியும் என்றார் சிங்கப்பூர் கல்வி அமைச்சின் தமிழ்மொழி கற்றல் வளர்ச்சி குழுத்தலைவருமான திரு.விக்ரம் குறிப்பிட்டார். மேலும், அவர் தமது உரையில் தமிழ்மொழி கற்றுக்கொள்வதற்கு கடினமான மொழி அல்ல என்றும் தமிழ்மொழியைக் கற்பிக்கும் அதே சமயத்தில் தமிழர் பண்பாட்டு அம்சங்களையும் வளர்ந்து வரும் நமது தலைமுறையினருக்குப் போதிக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

மனித வாழ்வின் அடிப்படை ஆதாரம் கற்றல் செயலாகும். நம் குணங்கள், குறிக்கோள், இலட்சியங்கள் இவையனைத்தும் செயல்வடிவம் பெற்று செயல்பட உந்துகோலாக அமைவது கற்றலே ஆகும். எல்லா மனிதர்களும், உயிரனங்களும் கற்றலின் செயலில் செயல்படுகிறார்கள். கற்றல் அனைவரிடத்திலும் ஒரே நிலையில் ஏற்படுவதில்லை. நுண்ணறிவு, சூழ்நிலை, ஆளுமைத்திறன், மனநிலை, ஈடுபாடு, ஆர்வம், மொழி, பண்பாட்டின் தாக்கம் ஆகியவற்றைப் பொறுத்து கற்றல் செயல் ஒவ்வொரு மனிதரிடம் வேறுபட்டு காணப்படும் (Black, 2002)[4]. தனி மனிதனின் கனவுகளும் இலட்சியங்களும் சரியாக வடிவம் பெற்றிருந்தாலும் அதன் அடிப்படைத்தன்மை மாறாமல், வழித்தவறாமல் சரியான முறையில் வழிநடத்துவதற்கு தமிழ்மொழி கற்றல் துணைநிற்கிறது. இதன் மூலம், நமது செயலின் சுவை மாறாமல் ஆளுமைத்திறனுடன் செயல்பட முடியும் (கணேசன், 2017)[5]. காலப்போக்கில், இத்தாக்கம் தனி மனிதனின் வாழ்விலும் நடத்தையிலும் பல மாற்றங்களை ஏற்படுத்தும். குறிப்பாக, அவனிடத்தில் உள்ள தனித்தன்மையை வெளிக்கொண்டு வர உதவுகிறது. அறிவின் வழியாக பெறுவதையும் கற்றல் கற்பித்தலின் வழியாக பெறுவதையும் கற்றல் மாற்றம் என உளவியல் அறிஞர்கள் குறிப்பிடுகிறார்கள். இதனையே. கேட் எனும் அறிஞர், “கற்றல் என்பது அனுபவத்தின் வழியே நடத்தையில் ஏற்படும் மாற்றம்”, என வழியுறுத்துகிறார்.

தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் மூலமாக, மாணவர்களின் சிந்தனைத்திறன் மேம்படுகிறது. சிந்தனை என்பது என்ன? சிந்தை அல்லது மூளையில் முதன்மையாக இடம்பெறும் ஒரு அடிப்படைச் செயற்பாடே சிந்தனையாகும் (தணலெட்சுமி, 2010)[6]. ஒருவர் கடுமையாக சிந்திக்கிறார் அல்லது திறமையாக சிந்திக்கிறார் என்பதை வரையறைச் செய்வது சிக்கலானது. சிந்தித்தலில் முதன்மையாக ஒரு அகச்செயற்பாடு என்பதால் புறவய நோக்கில் விவரிப்பது இன்னும் சிக்கலான ஒன்றாகவே இருக்கிறது (தயாளன் வேலாயுதபிள்ளை, 2019)[7]. ஆனால், மனிதனின் சிந்தனையை மேம்படுத்தவும் வலிமைப்படுத்தவும் தமிழ்மொழிக் கற்றல் கற்பித்தலால் முடியும். கயானியேயோ என்ற அறிஞர் தமது கயானியேயோ கோட்பாட்டின் வாயிலாக "சிந்தனை – செயல்முறைகளும் சிந்தனை இயந்திரங்களும் சிந்தனைக் கோட்பாட்டின் வெளிப்பாடுகளாகும்" எனக் கூறுகிறார். மேலும், நோம் சோம்சுக்கி எனும் அறிஞர் தமது மொழியியல் கோட்பாட்டின் வழியாக, "மொழியியல் மற்றும் புலனுணர்வு சார்ந்த சிந்தனையானது, குறியீட்டியல் மற்றும் மறுசுழற்சி செயல்முறைகளை அடிப்படையாக்க் கொண்டுள்ளது" எனக் குறிப்பிடுகிறார். மேற்கண்ட கருத்துகளின் வழி, அடிப்படை மொழிச் சார்ந்த செயல்பாடுகள், உள்ளத்தால் உணர்வறிவாகவும், அறிவுணர்வாகவும் உள்வாங்கும் கூறுகள் கொண்ட சிந்தனை அமைப்புகளின் வீச்சுப் பற்றி அறிய முடிகிறது.

தொடர்ந்து, தமிழ்மொழி கற்றல் கற்பித்தலின் வழியாக ஒருவரின் படைப்பாற்றல் திறன் மேம்படுகிறது. படைப்பாற்றல் என்பது, அனைவருக்கும் அவசியமான ஒன்று. படைப்பாற்றல் சிந்தனையின் மூலம், ஒன்றிலிருந்து இன்னொன்றையும் புதிதாக உருவாக்க முடியும். எந்த ஒரு விசயத்தையும் பார்க்கின்ற கோணம் மாறுபடும். சிந்தனை, எழுத்து, பேச்சு, செயல் என அனைத்து நடவடிக்கையிலும் மாறுபட்ட பார்வை உருவாகும். இந்த மாறுபட்ட கோணம் ஒரு சிக்கலைத் தீர்ப்பதற்கும் சிறந்த முடிவு எடுப்பதற்கும் உதவும். படைப்புத்திறன் உயர, 'நூல் பல கல்' என்ற பழமொழியை சொல்லிக் கேள்விப்பட்டிருக்கிறோம் (பசுமைக்குமார், 2018)[8]. தமிழ்மொழி நூல்களைப் பல கற்றாலே, வாசிக்கும் திறன் வளரும் போது யோசிக்கும் திறனுக்கும் அது அடித்தளமாக அமையும். புதிய கருத்துகளை உள்ளத்தில் தோற்றுவித்து, நமது சிந்தனையையும் மாறுபடுத்தும். படைப்பாற்றல் தனி மனிதனுக்கு மட்டும் உதவாமல் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக அமையும். அது அனைவரின் படைப்புத்திறனின் வளர்ச்சிக்கும் பெரிதும் கைக்கொடுக்கும்.

**முடிவுரை**

இறுதியாக, தமிழ்மொழி கற்றல் கற்பித்தல், கற்றலில் மட்டுமே மாற்றங்களைக் கொண்டு வராமல், அதனைப் படிக்கும் வாசகர்களுக்கும் பயனுள்ளதாக அமைகிறது. ஒரு தனி மனிதனின் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தி அவனின் சிந்தனைத் திறனை மேம்பட செய்து அவனை மேலும் உயர வைக்கிறது. எனவே, தமிழனாகிய ஒவ்வொருவரும் தமிழ்மொழியில் கற்றல் கற்பித்தலின் அவசியத்தை உணர்ந்து செயற்பட வேண்டும்.

**மேற்கோள் நூல்கள்:**


1. Babu, S. (2017). Tamiḻ kaṟṟal kaṟpippatil kalai maṟṟum navīṉa muṟaikaḷiṉ payaṉpāṭu [The Utility of Art and Modern Methods in Learning and Teaching of Tamil]. Faculty of Arts and Social Sciences.University of Malaya: Malaysia: Journal of Tamil Peraivu Publication.

2. Angappan-Pannirselvam, K. (2016). Ciṅkappūril tāymoḻiyil (tamiḻ moḻi) taramāṉa kaṟpittal maṟṟum kaṟṟal aṉupavaṅkaḷ [Quality Teaching and Learning Experiences in Mother Tongue (Tamil Language) in Singapore Kindergartens].Teachers' Perspectives (Doctoral dissertation, The University of Western Australia).

3. Tamiḻ muracu [Tamil Murasu], Singapore. (2019). Moḻi kaṟpittalil peṟṟōriṉ paṅku [The role of Parents in Language Teaching]. Retrieved from https://www.tamilmurasu.com.sg/community/story20190505-27960.html

4. Black, S. (2002). Stretching students' minds. American School Board Journal, 188 (6) (2002), pp. 31-33

5. Ganesan. (2017). Kaṟṟal maṟṟum kaṟpittal [Learning and Teaching]. Department of Educational Systems, Tamilnadu Teaching Educational University. Chennai: Tamilnadu Teaching Educational University Publication.

6. Dhanalakshmi, V., Kumar, M. A., Rekha, R. U., Soman, K. P., & Rajendran, S. (2010). Tamiḻ moḻikkāṉa ilakkaṇa kaṟpittal karuvikaḷ [Grammar teaching tools for tamil language]. In 2010 International Conference on Technology for Education (pp. 85-88). IEEE.

7. Thayalan VelayuthamPillai, Dr. (2019). Tamiḻ mānāṭu [Tamil Conference], Bergun. Retrived from https://www.TamilMorsålKonferense.com

8. Pasumaikumar. (2018). Kaṟpippatil paṭaippāṟṟal [Creativity in Teaching]. Tamil Charal 2018 IPG Ipoh. Retrieved from http://anyflip.com/ibzax/mgqz/basic